ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2418/ 03 - 2025 ජනවාරි මස 06 වැනි සඳුදා - 2025.01.06

2418/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (அ) - மாகாண சபைகள்

மாகாண சபை அறிவித்தல்கள்

துணை விதிகள்

பெல்மடுல்ல பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் இலக்கம் 126 (vi), (viii) மற்றும் (ix) வது பிரிவுடன் மொழியப்பட வேண்டிய குறித்த சட்டவாக்கின் 122 ஆவது பிரிவின் மூலம் பிரதேச சபைக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொலொன்ன பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட மற்றும் 2023.03.02 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை பொதுக்கூட்டத்தில் 02 ஆம் இலக்க பிரேரணை மூலம் தீர்மானிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள துணை விதியானது 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் மொழியப்பட வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச சபை சட்டவாக்கின் இலக்கம் 123(1) ஆவது பிரிவின் பிரகாரம் சப்பிரகமுக மாகாண ஆளுநர் ஏ.ஏ.சி.ஜே. இராஜரத்ன ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் இந்த அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து குறித்த துணைவிதியானது பெல்மடுல்ல பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

ஏ.ஏ. சி.ஜே. இராஜரத்ன,
கௌரவ ஆளுநர்,
சப்பிரகமுக மாகாணம்.

சப்பிரகமுக மாகாண சபை,
2024, திசெம்பர் 18.

PG 6981 -06 (2025/01)

பெல்மடுல்ல பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் செயல்படும் பிரதேசம் ஒன்றில் உள்ள காணி வரைபடங்கள், காணி துண்டாக்கல் வரைபடங்கள் மற்றும் கட்டிட வரைபுகள் பரிசீலனை செய்தல் அனுமதி அளித்தல் போன்றவை பற்றிய துணை விதி

1. பெல்மடுல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் அதிகாரங்கள் செயல்படுத்தப்படுகின்ற பிரதேசம் ஒன்றில் காணப்படும் காணி வரைபடங்கள், காணி துண்டாக்கல் வரைபடங்கள் , கட்டிட வரைபடங்கள் போன்றவற்றிற்கு அனுமதி அளித்தல், அத்துடன் அதிகாரப் பிரதேசத்தினுள் பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு உரித்தான விடயங்களை மேம்படச் செய்தல் போன்ற விடயங்கள் உட்பட அதனுடன் தொடர்புபட்ட உப ஏற்பாடுகள் ஆற்றுவதன் பொருட்டான துணை விதி என்று அழைக்கப்படும்.

2. இந்த துணை விதியானது பெல்மடுல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசம் ஒன்றில் காணப்படும் காணி வரைபடங்கள், காணி துண்டாக்கல் வரைபடங்கள் மற்றம் கட்டிட வரைபடங்களை பரிசீலனை செய்தல் அனுமதி அளித்தல் போன்றவை பற்றிய துணை விதி என்று அழைக்கப்படும்.

3. இந்த துணை விதி தயாரிக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126(vi) (viii) மற்றும் (ix) உப பிரிவுகளின் கீழ் பெல்மடுல்ல பிரதேச சபைக்கு அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

4. (i) 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் தலைவரின் அனுமதி பெறும் பொருட்டு முன்வைக்கப்படும் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான வரைபடங்கள் அல்லது மீள் நிர்மாணம் செய்தற்கான வரைபடங்கள் இந்த துணை விதியின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படும் பொருட்டு அதற்கு உரிய விண்ணப்பப்படிவம் மூலம் தலைவரின் அனுமதியை பெறுவதற்கு முன்வைக்கப்படல் வேண்டும்.

(ii) இந்த பிரிவின் கீழ் விண்ணப்பப்படிவம் ஒன்றை பிரதேச சபையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் பிரதேச சபை மூலம் காலத்திற்கு காலம் பிரேரணைகள் ஆமோதிக்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

5. 1975 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நிர்மாணத் திட்டம் ஒன்றிற்கான அனுமதியை பெறுவதற்காக மேலே 4 ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய முன்வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு உரிய காணிகள் இந்த துணை விதியின் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் முறைப்படி பிரதேச சபை தலைவர் மூலமாக அனுமதி பெறப்பட்டு உள்ள காணி வரைபடம் அல்லது காணி துண்டாக்கல் வரைபடம் உடைய காணியாக இருத்தல் வேண்டும்.

6.(i) மேலே 5 ஆம் பிரிவின் கீழ் அனுமதி பெறுவதற்காக முன்வைக்கப்படும் காணி வரைபடம், காணி துண்டாக்கல் வரைபடம் போன்றவற்றிற்கான அனைத்து விண்ணப்பங்களுக்கும் இந்த துணை விதியின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பப்படிவம் மூலம் அதற்கு தேவையான விடயங்கள் பூர்த்தியாகும் வகையில் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

(ii) இந்த பிரிவின் கீழ் விண்ணப்பப்படிவம் ஒன்றை பிரதேச சபையில் இருந்து பெற்றுக் கொள்வதற்காக, அதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் பிரதேச சபை காலத்திற்கு காலம் பிரேரணைகள் ஆமோதிக்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

7. கட்டுமாணம்; ஒன்று மேற்கொள்ள இருக்கும் உரிய காணி அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் ஒருவரினால் அபிவிருத்தி திட்டத்தின் மாதிரியான வரையப்பட்ட வரைப்படத்தின் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் அது வதிவிட நோக்காக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அத் தொடர்பான காணித் துண்டானது 6 பேர்ச் இற்கு குறையாத பரப்பளவினை கொண்டதாகவும், வியாபார நோக்காக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அக் காணித் துண்டானது 4 பேர்ச் இற்கு குறையாத பரப்பளவை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

அப்படி ஆயினும் ஏதேனும் காணி ஒன்று அபிவிருத்தி செயற்பாடு ஒன்றிற்காக துண்டாக்கல் செய்யும் போது அப்படி துண்டாக்கல் செய்யப்படும் வதிவிட நோக்கமாயின் 10 பேர்ச் இற்கு குறையாது இருத்தல் வேண்டும். அத்துடன் வியாபார நோக்கமாயின் 6 பேர்ச்சஸ் இற்கு குறையாது இருத்தல் வேண்டும்.

8. அனுமதி பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்படும் காணியின் வரைபடம், காணித் துண்டாக்கல் வரைபடம் தொடர்பாக இங்கே கீழ்க் குறிப்பிடப்பட்டு உள்ள நிபந்தனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும் :

(1) ஏதேனும் கட்டிடங்கள் காணப்படும் ஆயின் அவற்றின் அமைவு அளவு கோல்களுக்கு அமைய குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) காணி துண்டாக்கல் இடம்பெறும் அனைத்து காணிகளுக்கும் 1:1000 என்ற அளவுகளிலும், காணி துண்டாக்கல் அல்லாத காணிகளுக்கு 1:1000 அல்லது 1:2000 என்ற அளவுகளில் வரையப்பட்ட நில அளவை வரைபடம் ஆக இருத்தல் வேண்டும்.

(3) வரைபடத்தின் அளவுகள் வடக்குத் திசை மற்றும் பக்கத்து காணித் துண்டுகளின் அல்லது கட்டிடங்களின் வீதவரி இலக்கம் இருப்பின் அவ் இலக்கங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

(4) காணிக்கு பிரவேசிக்க உள்ள விதிகள் மற்றும் அவற்றின் அகலம் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

(5) தற்போது இருக்கும் அல்லது எதிர்பார்க்கப்படும் வடிக்கால்கள் மற்றும் நீரோடைகள், நீர் வடிந்தோடும் திசை என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

(6) இயற்கையான நீர் அல்லது மழை நீர் முறைப்படி வடிந்தோடும் முறை பற்றி குறிப்பிடப்படும் வடிகால் தொகுதி மற்றும் அவ் வடிகால் தொகுதியானது ஏதேனும் பொது வடிகால் தொகுதி ஒன்றிற்கு அல்லது வேறு நீரோடைகளுக்கு தொடர்புபடும் விதம் வரைபடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் தற்போது இருக்கும் வடிகால் தொகுதியின் அளவுகள் போதுமானதாக இல்லாத விடத்து நிர்மாணிக்க வேண்டிய மாற்றீடான வடிகால் தொகுதியின் அமைவானது வரைபடத்தில் குறித்துக் காட்டப்படல் வேண்டும்.

(7) காணியின் சரிவானது 10 பாகை அல்லது அதற்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் உரிய காணியின் உயர மட்டங்கள், தற்போது காணப்படும் உயர மட்டங்கள் , வீதியின் உயர மட்டங்கள் வரைபடத்தில் குறித்து காட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.

(8) முன்வைக்கப்படும் வரைபடத்தின் எல்லைகள் கறுப்பு நிறம் மூலம் குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(9) அனைத்து வீதிரேகை கோடுகள், கட்டிடத்தின் கோடுகள் மற்றும் வேறு வீதி ஒதுக்கங்கள் அல்லது வர்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ள அபிவிருத்தி திட்டங்கள் அல்லது சட்ட அங்கிகாரத்தின் மூலம் நியமப்படுத்தப்பட்டு உள்ள ஒதுக்கங்கள் அல்லது எல்லை ஒன்று உண்டு ஆயின் அது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

(10) தற்போது காணப்படும் நீர் மார்க்கங்கள், மனு குழிகள், வேலிகள் அல்லது எல்லைகள் தற்காப்பு சுவர்கள், மின் மற்றும் தொலைபேசி இணைப்பு கம்பி வழிகள் வரைபடத்தில் குறித்து காட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.

(11) ஒரு ஹெக்டயார் அல்லது அதற்கு கூடிய காணி ஒன்று ஆயின் காணித் துண்டாக்கல் மேற்கொள்ளும் போது அங்கே காணித் துண்டு ஒன்றின் நில அளவானது 40 பேர்ச் இற்கு குறையும் விதத்தில் மற்றும் 10 காணித் துண்டுகளுக்கு மேற்படும் விதத்தில் காணியானது துண்டாக்கப்படும் போது காணியின் உள்ளக விதிகளுக்காக உரிய நில அளவுகள் தவிர்ந்த ஏனைய காணியின் அளவில் 10% ஆன காணி அளவு ஒன்று வேறாக்கம் செய்யப்பட்டு அது பொது வேலைகளுக்கு ஆன நிலப்பகுதி என்று வரைபடத்தில் குறித்து காட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.

(12) துண்டாக்கல் வரைபடம் என்றால் அனைத்து உள்ளக வீதிகள், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் நியமங்களுக்கு ஏற்புடையதாக அமையும் விதத்தில் வரைபடத்தில் குறித்து காட்டப்படல் வேண்டும்.

(13) வரைபடங்களுக்கு அனுமதி வழங்கும் போது அதற்கு உரிய விடயங்கள் குறித்துக் காட்டுவதற்கு வரைபடத்தின் முன் பக்கத்தில் 7.5 x 5.5 சென்றிமீற்றர் அளவிளான இடம் ஒன்றை ஒதுக்கி வைத்திருத்தல் வேண்டும்.

(14) வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நில அளவில் உள்ளே அல்லது அதற்கு அருகில் மின் இணைப்புக்களை பெறுவதற்கான மின் கம்பங்கள் அமைந்திருக்கும் போது அவற்றின் அமைவு தொடர்பாக வரைபடத்தில் குறித்து காட்டப்பட்டு அல்லது விபரிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

9. இத் துணை விதியின் கீழ் காணியின் உரிமையாளர் மூலமாகவோ அல்லது காணியை அபிவிருத்தி செய்யும் நபர் மூலமாகவோ பெற்றுக் கொள்ள வேண்டிய இணக்க சான்றிதழ் தலைவரினால் வழங்கப்படுவதற்கு முன் காணி துண்டாக்கல் தொடர்பான பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நில அளவானது காணியின் உரிமையாளர் மூலம் பிரதேச சபைக்கு பரிசு பத்திரம் ஒன்றின் மூலம் வழங்கப்படல் வேண்டும்.

10.(1) இந்த துணை விதியின் 6 ஆம் பிரிவின் கீழ் அனுமதியை பெறுவதற்கு முன்வைக்கப்படும் அனைத்து விண்ணப்பங்கள் தொடர்பாக இந்த துணை விதியின் கீழ் விபரிக்கப்பட்டு உள்ள பௌதீக அனுமதி வழங்கும் கமிட்டியின் சிபாரிசு அடிப்படையாகக் கொண்டு தலைவரினால் அனுமதி வழங்கல் செய்யப்படல் வேண்டும்.

(2) இந்த பிரிவின் கீழ் பிரதேச தலைவரின் முடிவு தொடர்பாக அதிருப்தி அடையும் எவரேனும் ஒரு நபர் மூலம் அது தொடர்பாக மீள் முறையீடு ஒன்றை அம் முடிவு அறிவிக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு முன்வைக்க முடியும் அத்துடன் அது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் முடிவே இறுதி முடிவு ஆகும்.

(3) இந்த பிரிவின் கீழ் மீள் முறையீட்டு செயல் முறை சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் காலத்திற்கு காலம் அதற்கு உரிய நியமங்கள் ஆற்றுவதானது சட்ட ரீதியானது ஆகும்.

11. இந்த துணை விதியின் 6 ஆம் பிரிவின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்று தொடர்பாக இத் துணை விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய அனுமதி வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் அவ் அனுமதி வழங்க முடியாது என்பதை உரிய காரணங்களுடன் விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெற்று 30 நாட்களுக்குள் தலைவரினால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுத் தந்த நபருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

12. இந்த துணை விதியின் கீழ் காணித் துண்டு ஒன்றிற்கு வரைபடம், காணி துண்டாக்கல் தொடர்பான வரைபடம் ஒன்றிற்கான அனுமதியை பெறும் பொருட்டு விண்ணப்பிக்கும் போது அதனுடன் தொடர்புடைய காணியின் உரிமையாளர் அல்லது காணி உரிமையாளரின் உடன்பாடு உள்ள சந்தர்ப்பத்தில் காணி அபிவிருத்தியாளர் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

13. இந்த துணை விதியின் கீழ் அனுமதி வழங்கப்படும் காணித் துண்டு ஒன்று அல்லது காணி துண்டாக்கல் வரைபு ஒன்றிற்கு உள்ளடக்கப்பட்டு உள்ள அனைத்து காணித் துண்டுகள் அல்லது ஒரு காணித்துண்டு அல்லது பல காணித துண்டுகள் விண்ணப்பதாரரின் உரிமையை விட்டு வெளியே செல்லாத வரை எவ்விதத்திலும் பொது மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத விதத்தில் நடாத்திச் செல்லல் விண்ணப்பதாரரின் கடமை ஆகும்.

14. இந்த துணை விதியின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டு உள்ள காணித் துண்டாக்கல் வரைபு ஒன்றுடன் தொடர்புடைய ஏதேனும் காணித்துண்டு ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் போது காணி உரிமையாளர் தனக்கு காணியில் இருக்கும் உரிமைகளை விடுவதற்கு அல்லது அதுபோன்ற உரிமையிலிருந்து வெளியேறுவதற்கு ஏதேனும் ஒரு தொடர்பு காணி உரிமையாளர் மேற்கொள்வதற்கு முன்னர் உரிய காணி அல்லது காணித் துண்டு அனுமதி வழங்கும் போது பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய செயற்பாடுகள் ஆற்றப்பட்டு உள்ளது என தலைவர் மூலம் பெறவேண்டிய இணக்க சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

15. இந்த துணை விதியின் கீழ் அனுமதி வழங்கப்படும் காணித் துண்டு ஒன்றிற்கு உரிய வரைபடத்திற்கு அல்லது காணித் துண்டாக்கல் வரைபடம் ஒன்றிற்கு உரிய ஏதேனும் காணி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டு உள்ள குத்தகையின் கீழ் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில், விற்பனை செய்தல் தொடர்பாக மீட்டெடுக்கப்பட்ட பெறுமதி தொடர்பாக காணியின் உரிமையாளர் அல்லது அபிவிருத்தியாளர் ஊடாக பிரதேச சபையின் செயலாளருக்கு அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

16. இந்த துணை விதியின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் செயற்பாடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் இத் துணை விதியின் இரண்டாவது அட்டவணையின் கீழ் விபரிக்கப்பட்டு உள்ளதன் பிரகாரமாக அமைதல் வேண்டும்.

17. இந்த துணை விதியானது நடைமுறைப் படுத்தப் பட்டதன் பின்னர் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் தலைவரினால் அனுமதி அளிக்கப்பட்டு உள்ள காணித் துண்டாக்கல் வரைபு இல்லாமல் ஏதேனும் ஒரு காணியில் ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆற்றப்பட்டு இருக்குமாயின் உரிய வரைபடத்திற்கான அனுமதியை பெற்றுக் கொடுப்பதற்கு சட்டரீதியான முறையில் செய்வதன் பொருட்டு முன்வைக்கப்படும் அனைத்து விண்ணப்பங்கள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ் முடிவு செய்யப்படும் கட்டணங்களுக்கு மேலதிகமாக மேலதிக கட்டணம் ஒன்றை இத் துணை விதியின் இரண்டாவது அட்வணையில் விபரிக்கப்பட்டு உள்ள தொகுதி பிரிவின் கீழ் ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு பிரதேச சபையின் மூலம் காலத்திற்கு காலம் பிரேரணைகள் அனுமதிக்கப்பட்டு அறவிட்டுக் கொள்வது சட்டத்தின் படி ஆகும்.

18. இந்த துணை விதியின் கீழ் அனுமதி பெறுவதற்கு முன்வைக்கப்படும் காணி வரைபடங்கள் அல்லது காணி துண்டாக்கல் வரைபடங்கள் தொடர்பாக அனுமதி வழங்கப்படுவதற்கு முன் இத் துணை விதியின் மூன்றாவது அட்டவணையின் கீழ்க் குறிப்பிட்டு குறிப்பிடப்பட்டுள்ள சட்டபூர்வமான அதிகாரத்தினால் அல்லது உரியது என கருத்தில் கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் சட்டப்பூர்வமான அதிகாரம் ஒன்றின் மூலம் தீர்வு சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டி மூலம் பரிந்துரை செய்யப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் எதிர்பார்க்கப்படும் அனுமதியை பெறுவதற்காக உரிய தீர்வு சான்றிதழ் முன்வைக்கபடல் வேண்டும் என தலைவர் ஊடாக விண்ணப்பதாரரிடம் கோரல் சட்டத்தின் படி ஆனதாகும்.

19. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது மீள நிர்மானம் செய்வதற்கான அனுமதியை பெறுவதற்காக முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இத் துணை விதியின் 4 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் ஒன்றுடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

20. மேலே 19 ஆம் பிரிவின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பம் ஒன்றிற்கு உரிய நிர்மாண பணிகள் தொடர்பாக இத் துணை விதியின் 5 ஆம் பிரிவின் கீழ் தலைவரினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மூலம் குறித்த காணிக்கு உரிய நிர்மாணப் பணியாக இருத்தல் வேண்டும்.

21. மேலே 19 ஆம் பிரிவின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பம் ஒன்றிற்கு உரிய செயற்பாடுகள் ஆற்றுவதற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் இத் துணை விதியின் இரண்டாம் அட்டவணையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் ஆகும்.

22. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் தலைவரின் எழுத்து மூலமான அனுமதிக்காக முன்வைக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் இத் துணை விதியின் 4 ஆம் அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

23. இத் துணை விதியின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் விண்ணப்பிக்கும் போது திருத்தங்கள் மேற்கொள்ள எண்ணியுள்ள கட்டுமாணங்களுக்கு அவற்றிற்கு ஏற்புடையதான அனுமதி பெறப்பட்ட வரைபடத்தில் சிவப்பு நிறத்தால் குறித்து காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

24. இந்த துணை விதியின் பிரகாரம் விபரிக்கப்பட்டுள்ள பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டியின் பரிந்துரைகள் அடிப்படையாகக் கொண்டு மேலே 19 ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டு உள்ள விண்ணப்பப்படிவதற்கு உரிய வரைபடம் மற்றும் மேலே 22 ஆம் பிரிவின் கீழ் எழுத்து மூலமான அனுமதி பெறுவதற்கு முன்வைக்கப்படும் விண்ணப்பம் ஒன்றிற்கு தலைவர் மூலமாகவோ அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கும் வேறு ஏதேனும் அதிகாரம் ஒன்றினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வரைபடத்திற்கான அனுமதி அளித்தல் அல்லது எழுத்து மூலமான அனுமதி அளித்தல் என்பவற்றை மேற்கொள்ள முடியும்.

25. மேலே 19 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 22 ஆம் பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படும் வரைபடம் ஒன்றிற்காக அதற்கு உரித்தான விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெற்று 30 நாட்கள் கால எல்லைக்கு முன்னர் அனுமதி அளித்தல் அல்லது அனுமதி வழங்க முடியாது என்றால் அதற்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு அறிவிப்பது தலைவர் அல்லது அனுமதி வழங்கும் அதிகாரியின் கடமை ஆகும்.

26. இந்த துணை விதியின் பிரகாரம் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பு செய்வதற்கு உரிய வரைபடம் அல்லது வரைபடத்தில் மாற்றங்கள் செய்வதற்கு உரிய அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான வரைபடம் ஒன்றிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் போது அது குறித்து காணியின் உரிமையாளர் அல்லது காணி உரிமையாளரின் இணக்கம் உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தியாளர் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

27. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதி அளிக்கப்பட்டு உள்ள வரைபடம் இன்றி நிர்மாணிக்கப்பட்டு உள்ள கட்டிடம் ஒன்று அல்லது அக் கட்டளை சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அனுமதி பெறப்படாமல் கட்டப்பட்டு உள்ள கட்டிடம் ஒன்று தொடர்பாக இத் துணை விதியின் 19 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 22 ஆம் பிரிவின் கீழ் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்படும் போது , அதற்கு உரிய வரைபடத்திற்கு அனுமதியை பெற்றுக்கொடுக்கும் போது மற்றும் ஒப்புதல் வழங்கும் போது இத் துணை விதியின் இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்டு உள்ளதன் பிரகாரம் குறிப்பிடப்பட்டு உள்ள கட்டணத்திற்கு மேலதிகமாக சீராக்கல் கட்டணம் ஒன்றை அறவிட்டுக் கொள்வது சட்டப்படி ஆகும். அப்படி இருப்பினும் இத் துணை விதி ஆனது அமுலுக்கு வரும் திகதியில் இருந்து 2 வருட கால எல்லைக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ள வரைபடம் ஒன்று இன்றி கட்டிடங்கள் நிர்மாணித்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் தொடர்பான வரைபடம் ஒன்றிற்கு அனுமதி வழங்கும் போது அல்லது ஒப்புதல் வழங்கும் போது இப் பிரிவின் பிரகாரம் சட்டரீதியான கட்டணம் ஒன்றை அறவிட்டுக் கொள்வது ஏற்புடையது அல்லதாக இருத்தல் வேண்டும்.

28. இந்த துணை விதியின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படும் வரைபடம் ஒன்றிற்கு மற்றும் 22 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்று தொடர்பாக அனுமதியை பெற்றுக்கொடுக்கும் போது அதற்கு உரித்தான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் சரத்துக்கள் முதன்மையானவையாக இருத்தல் வேண்டியதோடு அக் கட்டளை சட்டத்தின் சரத்துக்கள் செயல்படாத விடயங்கள் தொடர்பாக , அச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குமுறை தலைவர் மூலம் உரியது ஆக்கிக்கொள்ள முடியும்.

29. இந்த துணை விதியின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 22 ஆம் பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்று சம்பந்தமாக தலைவரின் முடிவு தொடர்பாக அதிருப்தி அடையும் நபர் ஒருவர் அது தொடர்பாக மீள்பரிசீலனை செய்வதற்கு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளை சட்டத்தில் காணப்படும் சரத்துக்கள் ஏற்புடையவை என கருதப்படும்.

30. (1) இந்த துணை விதியின் பிரகாரம் உள்ள செயற்பாடுகள் தொடர்பாக பௌதீக வரைவு கமிட்டி ஆனது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்:

(அ) பிரதேச சபை தலைவர்
(ஆ) பிரதேச சபை செயலாளர்
(இ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் , திட்டமிடல் உத்தியோகத்தர்
(ஈ) பொது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரின் பிரதிநிதி
(உ) விடய உத்தியோகத்தர்

(2). இந்த துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்றிற்காக அனுமதியை பெற்றுக்கொடுக்கும் போது வேறு எவரேனும் அதிகாரம் உடையவரின் அவதானிப்பு பெறப்பட வேண்டும் என்று தலைவர் தீர்மாணம் மேற்கொனடால் அவ் அதிகாரம் உடையவரின் பிரதிநிதித்துவம் பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டியில் பங்குபற்ற செய்வதற்கு முதலாம் அட்டவணையின் சரத்துக்கள் தடையாக இருக்க கூடாது.

31. இந்த துணை விதியின் மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் ஏதேனும் ஒன்றாயின் அனுமதி பெறுவதற்கு முன்வைக்கப்படும் காணியின் வரைபடம், காணித் துண்டாக்கல் வரைபடம், கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல் மீள் நிர்மாணம் செய்தல் தொடர்பான வரைபடம் போன்றன அனுமதி பெற்றுக் கொள்வதற்காக பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டியின் கீழ் பரீசீலனை செய்வதற்கு முன்னர் உரிய காணி, கட்டிடம் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் தனக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் படி அனுமதிக்காக உரித்துடையது என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அமைந்து இருப்பின் அவ் அதிகாரம் உரிய முறையில் முன்வைக்கப்பட்டு அதற்கு உரிய சிபாரிசு அறிக்கை பெற்றுக் கொள்வது தலைவர் மூலம் ஆற்றப்படல் வேண்டும்.

32. இத் துணை விதியின் கீழ் 30 ஆம் பிரிவின் பிரகாரம் நடாத்தப்படும் பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் நியமிக்கப்படும் எண்ணிக்கைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்குவது சட்டத்தின் படி ஆகும். அப்படி இருப்பினும் இப் பிரிவின்

பிரகாரம் பௌதீக வரைபு அனுமதி வழங்கும் கமிட்டி அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் கலந்து கொள்வதற்கான கொடுப்பணவானது அன்றைய தினம் பரிசீலனை செய்யப்படும் இத் துணை விதியின் செயற்பாடுகளுக்காக முன் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு அறவிடப்பட்டு உள்ள தொகைகளில் எழுபத்தைந்து வீதத்தற்கு (75%) மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

33. இந்த துணை விதியின் பிரகாரம் செயற்பாடுகள் ஆற்றுவதற்கு அறவிடப்பட்ட கட்டணங்கள் பிரதேச சபை மூலம் பிரதேச சபை பொது நிதியில் பிரத்தியோக கணக்கு ஒன்றில் வைத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

34. இந்த துணை விதியின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றிற்கான காணி வரைபடம் ஒன்றிற்கு அனுமதி வழங்கல், காணி துண்டாக்கல் வரைபடம் ஒன்றிற்கு அனுமதி வழங்கல், கட்டிடங்கள் நிர்மாணித்தல் அல்லது மீள் நிர்மாணம் செய்தல் என்பவற்றிற்கு உரிய வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல், மாற்றங்கள் மேற்கொள்வதற்கு உரிய அனுமதி அளித்தல் போன்ற ஏதேனும் ஓர் செயற்பாட்டிற்கு அதற்கு உரித்தான ஆதனம் தொடர்பான உரிமைக்கோரல் தொடர்பாக தடைகள் (இடர்கள்) ஏற்படாத விதத்தில் இருத்தல் வேண்டும்.

35. இந்த துணை விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் காணி வரைபடம் ஒன்று அல்லது காணி துண்டாக்கல் வரைபடம் ஒன்றிற்கு அனுமதி பெறாமல் ஏதேனும் ஒரு காணியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது சட்டப்படி குற்றம் ஆகும். அக் குற்றம் தொடர்பாக நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளி ஆக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் தண்டனைகள் அனுபவிக்க வேண்டும்

36. சொற்கள் தொடர்பாக மேலதிக தெளிவுகள் தேவைப்படும் விடத்து,

" பிரதேச சபை" எனும் பதம், பெல்மடுள்ள பிரதேச சபை என்றும்.

" தலைவர் " எனும் பதம் பெல்மடுள்ள பிரதேச சபைக்காக 262 ஆம் இலக்க அதிகாரம் என்ற உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்கள் கட்டளை சட்டத்திற்கு இணைத்ததாக முறைப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர் என்றும்,

"உள்ளூராட்சி ஆணையாளர் " எனும் பதம் சப்பிரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் என்றும்,

"செயலாளர்" எனும் பதம் பெல்மடுள்ள பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக நிரந்தரமாகவோ அல்லது பதில் கடமை ஆற்றுவதற்கு நியமிக்கப்பட்டு இருக்கும் உத்தியோகத்தர் என்றும்,

"சுகாதார வைத்திய அதிகாரி" எனும் பதம் பெல்மடுள்ள பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட பிரதேசத்திற்கு உரிய சுகாதார வைத்திய அதிகாரி என்றும்,

"அபிவிருத்தி செயல்" எனும் பதம் ஏதேனும் காணி ஒன்றை துண்டாக்கல் அல்லது உப துண்டுகளுக்கு பிரித்தல் அல்லது காணி ஒன்றில் கட்டிடங்கள் நிர்மாணித்தல் அல்லது மீள் நிர்மாணம் செய்தல் அல்லது மேற்பரப்பிற்கு கீழ் அல்லது மேற்பரப்பிற்கு மேல் நிரந்தரமான ஏதேனும் ஓர் மாற்றம் செய்தல் என்றும்,

"கட்டிடங்கள் நிர்மாணித்தல்" எனும் பதம் கட்டிடம் அல்லது எல்லை மதில் சுவர் ஒன்று அல்லது நுளைவாயில் (கேட்) ஒன்றை புதிதாக நிர்மாணித்தல், புதிதாக பகுதி ஒன்றை நிர்மாணித்தல் அல்லது மாற்றம் செய்தல் என்று பொருட்படும்.

இந்த துணை விதியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் சொற்களுக்கு இடையே வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள சொற்கள் ஏற்புடையதாக கருதப்படும்.

முதலாம் அட்டவணை

பெல்மடுள்ள பிரதேச சபை
காணி வரைபடம் , காணி துண்டாக்கல் வரைபடம் ஒன்றிற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

குறியீட்டு இலக்கம் :

01. விண்ணப்பதாரரின் தகவல்கள்

1.1 விண்ணப்பதாரரின் பெயர் : ....

1.2 மின்னஞ்சல் முகவரி : ....

1.3 தே. அ. அ. இல. வெ. க .சீ. இல. : ....

1.4 நிரந்தர தொ. பே. இல. : .... கையடக்க தொ. பே. இல. : ....

1.5 முகவரி : ....

1.6 ஏனைய விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களின் தகவல்கள்

பெயர்	மின்னஞ்சல் முகவரி	தே. அ. அ. இல.	நிரந்தர தொலைபேசி இல.	கையடக்க தொலைபேசி இல.	முகவரி

விண்ணப்பதாரர் ஒரு கம்பனி அல்லது வியாபார நிலையம் என்றால் அதற்கு உரிய பதிவிலக்கம் : ....

(அதற்கு உரிய பதிவுச் சான்றிதல் இணைக்கப்படல் வேண்டும்)

02. உத்தேச அபிவிருத்தி நோக்கம் தொடர்பான சுருக்கமான விளக்கம்

2.1. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள காணி அளவினுள் மேற்கொள்ள எண்ணியுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள்

1. காணித் துண்டாக்கல்		2. காணிகளை ஒன்று சேர்த்தல்		3. வதிவிட நோக்கத்திற்கான மனை	
4. வியாபார நோக்கத்திற் கான கட்டிடங்கள்		5. தொழிற்சாலைக்கான நிர்மாண பணிகள்		6. வேறு ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடுகள்	

(மேலே 6 இன் கீழ் அடங்கும் வேறு ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆயின் அவற்றின் தன்மை)

2.2 அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ள வளாகத்தினுள் இதற்கு முன் அனுமதி வழங்கப் பட்டுள்ள வரைபடம் இருப்பின் அதன் இலக்கம் .... (முன்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைபடத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

2.3 உத்தேச அபிவிருத்தி திட்ட வரைபடம் தொடர்புடைய சொத்து சம்பந்தமாக

2.3.1 முகவரி : ....

2.3.2 வீதவரி இலக்கம் இருப்பின் : ....

(அண்மித்த வருடத்திற்கான வீதவரி/ஏக்கர் வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்)

2.3.3 அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு : ....

2.3.4 காணித் துண்டின் உரிமை : ....

முழுமையான உரிமை		குத்தகை		பரிசு அளிப்பு		வேறு	

(வேறு என்றால் உரிமை கிடைத்த விதத்தை குறிப்பிடவும்)

2.4 உரிமை கிடைக்கப்பெற்ற அளிப்பின் / சான்றிதழ் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல்வேண்டும்.

3. விண்ணப்பதாரர் அனுமதி பெற எதிர்பார்க்கும் வரைபிற்கு உரிய காணியின் உரிமையாளரா அல்லது இல்லையா :

3.1 விண்ணப்பதாரர் காணியின் உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில் காணி உரிமையாளர் பற்றிய தகவல்கள்

3.1.1 காணி உரிமையாளரின் முழுப் பெயர் :- ....

....

3.1.2 தே. அ. அ. இல. :-... (பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3.1.3 தொலைபேசி இல. நிரந்தர :-...................................... கையடக்க :- ....

3.1.4 நிரந்தர முகவரி :- ....

3.1.5 மின்னஞ்சல் முகவரி :- ....

3.1.6 பெக்ஸ் இலக்கம் :- ....

3.2 இங்கேயே பகுதியாக உரிமையாளரின் பிரகடணத்தை பூர்த்திசெய்து முன்வைக்கப்படல் வேண்டும்.

4. அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள வரைபடத்திற்கு உரிய காணிக்கு இலகுவாக பிரவேசிக்கக் கூடிய வீதி பற்றி வரைபடம் மூலம் சுட்டிக்காட்டி விண்ணப்பப்படிவத்துடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

5. அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள வரைபடத்திற்கு உரிய காணி பற்றிய தகவல்கள்

5.1 காணியின் தற்போதைய பாவனை

வெற்று தரிசு நிலம்		ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வதிவிடங்கள்		வதிவிடம் தனி அலகு		வணிக நோக்கின்கீழ் ஆன	
அலுவலக நோக்க		சிற்றுண்டிச்சாலை ஹோட்டல் போன்ற வியாபார நிலையங்கள்		தொழிற்சாலைகள்/ வேலைத்தலங்கள்/ களஞ்சியசாலைகள்		வேறு	

(வேறு என்றால் அதன் பாவனை நோக்கம் பற்றிய தகவல்கள்)

5.2 காணியில் கட்டிடங்கள் ஏதாவது அமைந்து உள்ளனவா ? ஆம் / இல்லை

5.3 தற்போது காணப்படும் அனைத்து எல்லை மதில் சுவர்கள், வேலிகள் வரைபடத்தில் காட்டப்பட்டு உள்ளனவா ? ஆம் / இல்லை

5.4 வரைபடம் வரைந்த நில அளவையாளரின் பெயர் :- ....

5.5 அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள நில அளவை வரைபட இலக்கம் :-.......................

5.6 காணி அளிக்கப்பட்ட திகதி :- ....

5.7 நில அளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மொத்த பரப்பளவு :-................................

5.8 அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள வரைபடம் 2 பிரதிகளுடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

6. உரிய காணிக்கு வசதிகள் கிடைக்க பெறும் முறைகள்

6.1 வரைபடம் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிக்கு குடிநீர் வசதிகள் பெற்றுக்கொள்வதற்கான உத்தேச செயல்முறை :- ....

....

6.2 திண்ம கழிவுகள் அப்புறப்படுத்தல் தொடர்பான செயல்முறை :- ....

....

6.3 தேசிய மின்சார வலையமைப்பு மூலம் மின்சார வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றதா ? ....

7. விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்படும் போது அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள வரைபடத்திற்கு உரிய காணி தொடர்பான தீர்வுச் சான்றிதழ் பெறப்பட்டு இருப்பின் அது தொடர்பான தகவல்கள்

சான்றிதழின் பெயர்	வழங்கிய நிறுவனம்

அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகள் இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பப்படிவம் தொடர்பான கட்டணங்கள்

8.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி : ....

8.2 கட்டணம் (ரூபா) : ....

8.3 கட்டணம் செலுத்தப்பட்ட விதம் - பணம் மூலம் / காசோலை மூலம்
(பற்றுச்சீட்டு முன்வைக்கப்படல் வேண்டும்)

மேற்குறிப்பிட்ட அனைத்து தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் தெரியப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

....

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

காணி உரிமையாளரின் பிரகடணம்

விண்ணப்பதாரர் காணியின் உரிமையாளர் அல்லாத விடத்து இப் பிரகடனமானது காணி உரிமையாளர் கையெபப்பம் இட்டு சமர்பிக்கப்படல் வேண்டும்

01 விண்ணப்பதாரரின் மற்றும் உத்தேச அபிவிருத்தி தொடர்பான தகவல்கள்

1.1 விண்ணப்பதாரரின் பெயர் :- ....

1.2 முகவரி :- ....

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ....

1.4 தொலைபேசி இல. கையடக்க :-.. நிரந்தர :-...

1.5 உத்தேச அபிவிருத்தித் திட்டத்தின் சுபாவம் :-...

1.6 அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள காணியின் முகவரி :- ....

1.7 வீதவரி இலக்கம் (இருப்பின்) :- ....

02 மேலே இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிடப்படும் உத்தேச அபிவிருத்தித் திட்டத்திற்காக காணியானது அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் .... மூலம் வரையப்பட்ட .... இலக்கமும் மற்றும் .... திகதியும் கொண்ட நில அளவை வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணியின் முழு உரிமையாளர் / குத்தகையாளர் நான் / நாங்கள் என்றும் , எனக்கு /எங்களுக்கு உரித்தான அக் காணியில் மேற்கொள்ள உள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்காக மேலே இலக்கம் 01 இல் விண்ணப்பதாரர் என்ற ரீதியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள .... என்ற நபருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் பிரதேச சபை மூலம் அதற்குரிய வரைபுகள் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் உட்பட அதனுடன் தொடர்புபட்ட ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக என் / எங்கள் சார்பாக கடமைகள் ஆற்றும் பொருட்டு .... என்ற நபருக்கு அதிகாரம் உள்ளது என்று கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன் / தெரிவித்துக்கொள்கின்றோம்.

20........ ஆம் ஆண்டு .... மாதம் .... ஆம் திகதி.

பெயர்	கையொப்பம்
1.	....
2.	....
3.	....
4.	....
5.	....

இரண்டாம் அட்டவணை

காணி துண்டாக்கல் வரைபடம் ஒன்று தொடர்பான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக உரிய காணித் துண்டு ஒன்று தொடர்பாக	
06 பர்ச்சஸ் முதல் 10 பர்ச்சஸ் வரை	ரூபா 500.00
10 பர்ச்சஸ் முதல் 20 பர்ச்சஸ் வரை	ரூபா 1000.00
20 பர்ச்சஸ் இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில்	ரூபா 1500.00
காணி வரைபடம் ஒன்று தொடர்பாக அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக உரிய காணித் துண்டு ஒன்று தொடர்பாக	
40 பர்ச்சஸ் வரை	ரூபா 1000.00
41 பர்ச்சஸ் முதல் 80 பர்ச்சஸ் வரை	ரூபா 1500.00
81 பர்ச்சஸ் இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில்	ரூபா 2000.00
காணி வரைபடம் ஒன்று உரிய அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் காணித் துண்டாக்கல் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் அதை சட்டரீதியாக்குவதற்கு உரிய காணித் துண்டாக்கல் வரைபடம் தொடர்பாக அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக அறவிடப்பட வேண்டிய நியம கட்டணத்திற்கு மேலதிகமாக அக் கட்டணத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் மேலதிகமாக செலுத்த வேண்டும்	
06 பர்ச்சஸ் முதல் 10 பர்ச்சஸ் வரை	30 %
10 பர்ச்சஸ் முதல் 20 பர்ச்சஸ் வரை	40 %
20 பர்ச்சஸ் இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில்	50 %

கட்டிடங்கள் நிர்மாணித்தல் / புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மாற்றங்கள் மேற்கொள்ளல் தொடர்பாக (சதுர மீற்றர் ஒன்றிற்காக)

மனையிடத்தின் அளவு (சதுர மீற்றர்)	வதிவிட நோக்கமாயின்		வதிவிட நோக்கம் அல்லாத
	தனி வீடு	மாடி வீடு	
400 வரை	ரூபா 20.00	ரூபா 25.00	ரூபா 25.00
401 - 1000 வரை	ரூபா 22.00	ரூபா 27.00	ரூபா 27.00
1001 – 1500 வரை	ரூபா 25.00	ரூபா 30.00	ரூபா 30.00
1501 – 2000 வரை	ரூபா 25.00	ரூபா 32.00	ரூபா 32.00
2000 இற்கு மேற்படும் ஒவ்வொரு 90 சதுர மீற்றர் இற்கும்	ரூபா 2000.00	ரூபா 2000.00	ரூபா 2000.00

சட்டரீதியாக்குவதற்கான கட்டணங்கள் - அத்திவாரம் வரை கட்டப்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில்

அபிவிருத்தித் திட்டத்தின் சுபாவம்	உரிய கட்டிட வரைபடம் தொடர்பாக அனுமதியை பெற்றுக்கொடுக்கும் போது அறவிட வேண்டிய நியம கட்டணத்திற்கு மேலதிகமாக அக் கட்டணத்தின் செலுத்த வேண்டிய மேலதிக கட்டணம்	
	வதிவிட நோக்கமாயின்	வதிவிட நோக்கம் அல்லாத
அத்திவார மட்டம் வரை	25 %	30 %
கூரை மட்டம் வரைபிடம் மற்றும் தாங்கிகள் (பால்க) உட்பட நிர்மாணித்து இருப்பின் (கூரை இன்றி)	30 %	40 %
கூரை மற்றும் சுவர் நிர்மாணித்து இருப்பின்	50 %	60 %

மதில் சுவர்கள் / பக்க சுவர்கள் என்பன நிர்மாணித்தல் தொடர்பாக (மீற்றர் நீளத்திற்கு கட்டணம்)		
	உயரம் 2 மீற்றர் இற்கு குறைவான சந்தர்ப்பத்தில்	உயரம் 2 மீற்றர் இற்கு கூடுதலான சந்தர்ப்பத்தில்
நீளம் 50 மீற்றர் இற்கு குறையும் போது	ரூபா 25.00	ரூபா 50.00
நீளம் 50 மீற்றர் இற்கு கூடும் போது	ரூபா 35.00	ரூபா 60.00
ஏனைய கட்டுமாணப் பணிகள்		
	நிர்மாணம் செய்வதற்கு	சட்டரீதி ஆக்குவதற்கு
தொலைத்ததொடர்பு / அன்டனா / பரிமாற்றல் கம்பங்கள்	ரூபா 40000.00	ரூபா 75000.00
இணக்கச் சான்றிதழ் வழங்கல் தொடர்பாக		
கட்டிடங்கள் (வதிவிட நோக்கமாயின்)		ரூபா 2000.00
கட்டிடங்கள் (வதிவிட நோக்கம் அல்லாத)		ரூபா 3000.00
காணி துண்டாக்கல் வரைபடங்கள்		ரூபா 3000.00

மூன்றாம் அட்டவணை

தீர்வுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டிய அதிகாரம் உடைய நிறுவனங்கள் (உரிய சந்தர்ப்பங்களில்)

1	தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம்
2	மத்திய சுற்றாடல் அதிகாரசபை
3	இலங்கை முதலீட்டு சபை
4	புவிச் சரிதவியல் அளவை சுரங்க பணியகம்
5	பாதுகாப்பு அமைச்சு
6	தீயணைப்பு சேவைகள்
7	இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை
8	தொல்பொருளியல் திணைக்களம்
9	நீர்பானைத் திணைக்களம்
10	இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
11	இலங்கை மின்சார சபை
12	இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
13	காணி ச்சீர்திருத்த ஆணைக்குழு
14	பிரதேச செயலகம்
15	கமநல அபிவிருத்தி திணைக்களம்
16	வன பாதுகாப்பு திணைக்களம்
17	உரிய வேறு நிறுவனங்கள்

நான்காம் அட்டவணை

பெல்மடுல்ல பிரதேச சபை

கட்டிட வரைபடம் ஒன்றிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

குறியீட்டு இலக்கம் : ....

01. விண்ணப்பதாரரின் தகவல்கள்

1.1 விண்ணப்பதாரரின் பெயர் : ....

1.2 மின்னஞ்சல் முகவரி : ....

1.3 தே. அ. அ. இல. வெ. க. சீ. இல. : ....

1.4 நிரந்தர தொ. இல. : .... கையடக்க தொ. இல. : ....

1.5 முகவரி : ....

1.6 ஏனைய விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களின் தகவல்கள்

பெயர்	மின்னஞ்சல் முகவரி	தே. அ. அ. இல.	நிரந்தர தொ. இல.	கையடக்க தொ. இல.	முகவரி

1.7 விண்ணப்பதாரர் கம்பனி அல்லது வியாபார நிறுவனம் ஒன்றாயின் அதற்கு உரிய பதிவுச் சான்றிதழ் இலக்கம் : .... (அதற்கு உரிய பதிவுச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)

02. உத்தேச அபிவிருத்தி பணி பற்றிய சுருக்கமான விபரம் :

2.1 நிர்மாணிப்பதற்கு உத்தேசித்து உள்ள கட்டிடத்தின் பாவனை

1. புதிய கட்டுமாணம்		2.மாற்றங்கள் மேற்கொள்ளல்		3. வதிவிட நோக்கத்திற்கான மனை	
4. வியாபார நோக்கத்திற்கான கட்டிடங்கள்		5. தொழிற் சாலைக் கான நிர்மாணப் பணிகள்		6. வேறு ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கட்டடங்கள் நிர்மாணித்தல்	

மேலே 6 ஆம் இலக்கத்தின் கீழ் வேறு ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கட்டடிங்கள் நிர்மாணிக்கும் போது அவற்றின் தன்மை ....

....

2.2 உத்தேச அபிவிருத்தி பிரதேசத்திற்கு உரிய முன்னர் அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடம் ஒன்று இருப்பின் அதன் இலக்கம் .... (முன்னர் அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

2.3 நிர்மாணிப்பதற்கு உத்தேசித்து உள்ள கட்டிடத்தில் எத்தனை நபர்கள் ஒரேநேரத்தில் பயன்படுத்த முடியும் : ....

03. உத்தேச நிர்மாண வரைபடம் தொடர்பாக

3.1 முகவரி : ....

3.2 வீதவரி இலக்கம் (இருப்பின்) :- ....

(அண்மித்த வருடத்தில் வீதவரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு முன்வைக்கப்படல் வேண்டும்.)

3.3 அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு : ....

3.4 கட்டுமாண வரைபடத்திற்கு உரித்தான காணியின் உரிமை : ....

முழுமையான உரிமை		குத்தகை		பரிசு அளிப்பு		வேறு	

(வேறு என்றால் உரிமை கிடைக்கப் பெற்ற விதத்தைக் குறிப்பிடுக)

3.5 கட்டுமாணம் மேற்கொள்ள எண்ணியுள்ள காணியின் நில வரைபடம் பிரதேச சபை தலைவரினால் அனுமதி அளிப்பதற்கு சமர்பிக்கப்பட்ட குறியீட்டு இலக்கம் மற்றும் திகதி :

(தலைவரினால் அனுமதி அளிக்கப்பட்ட நில அளவை வரைபடத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3.6 விண்ணப்பதாரர் அனுமதி பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரைபடத்தின் காணியின் உரிமையாளரா இல்லையா : ....

04. விண்ணப்பதாரர் காணியின் உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில் காணி உரிமையாளர் பற்றிய தகவல்கள்

4.1 காணி உரிமையாளரின் முழுப் பெயர் : ....

....

4.2 தே. அ. அ. இல. : .... (பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4.3 தொலைபேசி இல. நிரந்தர : .... கையடக்க : ....

4.4 நிரந்தர முகவரி : ....

4.5 மின்னஞ்சல் முகவரி : ....

4.6 பெக்ஸ் இலக்கம் :- ....

4.7 இதன் பகுதியாக உரிமையாளரின் பிரகடனம் பூரணப்படுத்தப்பட்டு முன்வைக்கப்படல் வேண்டும்.

05. கட்டுமாணம் மேற்கொள்ள உத்தேசித்து உள்ள காணிக்கு உரிய பிரவேச வீதிகள் பற்றிய தகவல்கள்

5.1 அபிவிருத்தி மேற்கொள்ள உத்தேசித்து உள்ள காணியின் வரைபடம் (பிரதான நகரம், சந்திகள், பிரதான வீதியில் இருந்து காணிக்கு பிரவேசிக்க உள்ள வீதி, விசேட அடையாளங்கள், பக்கத்தில் உள்ள காணிகளின் விபரங்கள் உள்ளடக்கிய சுருக்கவிபர வரைபடம் ஒன்று மற்றும் உரிய விடயங்கள் இணைக்கப்படல் வேண்டும்.)

5.2 பிரதான வீதி / பிரவேச வீதி என்பவற்றின் உரிமை : பொது / தனிப்பட்ட

5.3 பிரதான வீதி / பிரவேச வீதி என்பவற்றின் அகலம் (மீற்றர்) : ....

06. கட்டுமாணம் மேற்கொள்ள உத்தேசித்து உள்ள கட்டிடத்தில் இருந்து காணியின் எல்லைகளுக்கு உள்ள தூரம்

எல்லை	தூரம் (மீற்றர்)
1. வீதியின் எல்லை அல்லது வீதிரேகை	
2. பின் பக்க எல்லை	
3. இடது பக்க எல்லை	
4. வலது பக்க எல்லை	
5. ஆறு, ஓடை, கால்வாய், குளம் , பாதுகாக்கப்பட்ட பிரதேசம்	
6. வேறு (குறிப்பிடவும்)	

07. உத்தேச அபிவிருத்தித் திட்டம் தொடர்பான தகவல்கள்

7.1 உத்தேச கட்டிடத்தில் உள்ள மாடிகளின் எண்ணிக்கை : ....

7.2 உத்தேச கட்டிடத்தின் மொத்த நிலப்பரப்பு (சதுர மீற்றர்) : ....

7.3 ஒவ்வொரு மாடிக்குமான நில அளவு

மாடி	உத்தேச அளவு (சதுர மீற்றர்)	மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அப்போது இருக்கும் கட்டிடத்திற்கு உரிய அளவு (சதுர மீற்றர்)
மொத்த பரப்பளவு (சதுர மீற்றர்)		

7.4 கட்டுமானத்தினால் மூடப்படும் நிலப்பரப்பு அனுமதி அளிக்கப்பட்டு உள்ள நில அளவை வரைபடத்தில் என்ன சதவீதம் : ....

7.5 மனையிடத்தின் விகிதம் (அனைத்து மாடிகளினதும் மொத்த நிலப் பரப்பு (வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை தவிர்ந்த) காணியின் அளவு (வீதிரேகையில் காட்டப்படும் நில அளவை தவிர்ந்த) : ....

7.6 உத்தேச காணியை மீட்பதற்கு , நிரப்புவதற்கு எண்ணி இருப்பின் அது பற்றிய பிரேரணை , தற்போது இருக்கும் கட்டிடங்கள், வீதிகள் மற்றும் வடிகால்கள் அடங்கிய வரைபடம் முன்வைக்கப்படல் வேண்டும்.

7.7 ஒவ்வொரு மாடியினதும் நில பாவனை தொடர்பாக நில அளவு ஆவணம் ஒன்றை இணைக்கவும்.

7.8 உத்தேச அபிவிருத்தி தொடர்பான வரைபடம் / வரைபடங்கள் இணைக்கவும்.

7.9 உத்தேச அபிவிருத்தி தொடர்பான முதலீட்டின் பெறுமதி (ரூபா) : ....

7.10 குளிரூட்டிகளின் வகை (உரியது என்றால்) - மையப்படுத்தப்பட்ட /பிரிந்த /பொருத்தம் அற்றது

7.11 கட்டுமாணம் மேற்கொள்ள எதிர்பார்க்கும் மூலப்பொருட்கள் பற்றிய தகவல்கள்

7.11.1 சுவர் : ....

7.11.2 கூரை / கூரைகள்: ....

7.11.3 தரை / தரைகள் : ....

7.11.4 மேல் மாடி சிலப் : ....

7.11.5 அத்திவாரம் : ....

08. அபிவிருத்தியுடன் தொடர்புடைய தகவல்கள்

8.1 வாகனங்கள் நிறுத்துதல் மற்றும் போக்குவரத்து தொடர்பாக ஏற்படும் விளைவுகள்

8.1.1 வரைபடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் பற்றி குறிப்புக்கள் உள்ளனவா? ஆம் / இல்லை

8.1.2 ஆம் என்றால் நிறுத்துமிடங்களின் எண்ணிக்கை : ....

8.1.3 நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ....

8.2 பிரதேச சபைக்கு உட்பட்ட மனையிடங்களின் அபிவிருத்தி தொடர்பான தகவல்கள்

8.2.1 தற்போது இருக்கும் அலகுகளின் எண்ணிக்கை (இருப்பின்) : ....

8.2.2 கட்டுமாணம் மேற்கொள்வதற்கு உத்தேசித்து உள்ள அலகுகளின் எண்ணிக்கை : ....

8.2.3 மொத்த அலகுகளின் எண்ணிக்கை : ....

8.2.4 வீட்டு அலகுகள் இலக்கம் இடப்பட்டு மற்றும் வேறுபட்ட வர்ணங்களுடன் திட்டமிடப்பட்டு உள்ளனவா ? ஆம் / இல்லை

8.3 மூன்று மாடிகளுக்கு விட கூடும் கட்டுமாணம் ஒன்று தொடர்பாக மின் தூக்கி வசதிகள் உள்ளனவா ? ஆம் / இல்லை

8.4 மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சார வசதிகள் பெற்றுப்கொடுப்பதற்கான வசதிகள் உள்ளனவா ? ஆம் / இல்லை

09. வேறு சரத்துக்கள்

9.1 மேற்பரப்பு நீர் வழிந்து ஓடுவதற்கு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் : ....

....

9.2 மலசல கழிவுகள் அகற்றுவதற்கு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் : ....

....

9.3 கழிவு நீர் அகற்றுவதற்கு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் : ....

....

9.4 திண்மக் கன்கழிவுகள் அகற்றுவதற்கு செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் : ....

....

9.5 பொதுமக்களுடன் தொடர்புடைய பிரவேச வழிகளின் போது அங்கவீனர்களுக்கு பயணிக்க ஏற்ற விதத்தில் பிரவேச வழி வசதிகள் செய்யப்பட்டு உள்ளனவா ? (1467/15 ஆம் இலக்கமும் 2006.10.17 ஆம் திகதியும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம்) ஆம் / இல்லை

9.6 மழை நீர் சேகரிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டு உள்ளனவா ? ஆம் / இல்லை

10. விண்ணப்பப்படிவம் முன்வைக்கும் போது அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசித்துள்ள கட்டுமாணத்திற்கு உரிய தீர்வுச் சான்றிதழ் பெறப்பட்டு இருப்பின் அது தொடர்பான தகவல்கள்

சான்றிதழின் பெயர்	வழங்கிய நிறுவனம்

அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகள் இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

11. விண்ணப்பப்படிவம் தொடர்பான கட்டணங்கள்

11.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி : ....

11.2 கட்டணம் (ரூபா) : ....

11.3 கட்டணம் செலுத்தப்பட்ட விதம் - பணம் மூலம் / காசோலை மூலம்

(பற்றுச்சீட்டு முன்வைக்கப்படல் வேண்டும்)

மேற்குறிப்பிட்ட அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இத்தால் தெரியப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பப்படிவத்துடன் தொடர்புடைய எழுத்து சட்ட விதிகளுக்கு உட்பட்டு தேர்ச்சி பெற்ற வரைபடம் வரைபவர் , நகர வடிவமைப்பாளர் , பொறியியலாளர் மூலமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட உத்தேச கட்டிட கட்டுமாணத்திற்கு தொடர்பான முன் பக்க பார்வை, பக்க பார்வை மற்றும் வியூகம் குறித்து காட்டப்படுமாறு வரையப்பட்ட வரைபடத்தின் 3 பிரதிகள் இத்துடன் முன்வைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கின்றேன்.

....
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

காணி உரிமையாளரின் பிரகடணம்

விண்ணப்பதாரர் உத்தேச கட்டுமாணம் தொடர்பான காணியின் உரிமையாளர் அல்லாத விடத்து இப் பிரகடணமானது உரிய காணியின் உரிமையாளர் மூலம் கையொப்பம் இட்டு முன்வைக்கப்படல் வேண்டும்.

1 விண்ணப்பதாரரின் மற்றும் உத்தேச அபிவிருத்தித் திட்டம் தொடர்பான தகவல்கள்

1.1 விண்ணப்பதாரரின் பெயர் : ....

1.2 முகவரி : ....

1.3 தே. அ. அ. இல. : ....

1.4 தொலைபேசி இல. கையடக்க :...................................... நிரந்தர : ....

1.5 உத்தேச கட்டுமாணத்தின் சுபாவம் : ....

1.6 உத்தேச கட்டுமாணம் மேற்கொள்ளும் காணியின் முகவரி : ....

....

1.7 வீதவரி இலக்கம் (இருப்பின்) :- ....

02. மேலே இலக்கம் 01 இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள கட்டுமாணம் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள கட்டிடம் தொடர்பாக .... மூலம் வரையப்பட்ட வரைபடத்தின் திட்டத்திற்கு அமைய கட்டுமாணங்கள் உட்பட அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகள் முன் எடுத்துச் செல்வதற்கு அதனுடன் தொடர்புடைய பிரதேச சபைக்கு முன்வைக்க வேண்டிய அனைத்து ஆவணங்களும் எனக்கு / எங்களுக்கு பதிலாக கையொப்பமிட்டு முன்வைப்பதற்கும் , அதனுடன் தொடர்புடைய அனைத்து அனுமதிகளும் அதனுடன் தொடர்புடைய சட்டபூர்வ நிறுவனங்களிலிருந்து பெற்று செயற்பாடுகள் ஆற்றுவதற்கு மேலே முதலாவது பந்தியின் கீழ் விண்ணப்பதாரர் என்ற ரீதியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள .... என்ற நபருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றேன் / தெரிவிக்கின்றோம் .

20........... ஆம் வருடம் .... மாதம் .... ஆம் திகதி

பெயர்	கையொப்பம்
1.	....
2.	....
3.	....
4.	....
5.	....

EOG01-0050